ஜனவரி 20-26

**பாடம் 4**

# உலக மரபுகளைவிட்டுத் தப்புதல்

**மனன வசனம்**

**கோபாக்கினை நாளில் ஐசுவரியம் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும். தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்; நீதிமான்களோ துளிரைப்போலே தழைப்பார்கள். நீதி 11:4,28.**

**ஆராய்ச்சிக்கு**

**சங்கீதம் 119:11; எபேசியர் 6:18; ரோமர் 8:5,6; எபிரெயர் 11:1-6; 1இராஜா 3:14; எசே 36:26,27.**

ஜனவரி 20 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



இயேசுவிடம் தோல்வியடைந்த சாத்தான், மற்ற எல்லாரையும் வென்றுவிட்டான். நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் வல்லமையையும் அணியாமல் போரிட்டால், அவனை வெல்லவே முடியாது; இந்த உலகின் கவர்ச்சிகளிலிருந்து தேவன்மட்டுமே நம்மை விடுவிக்கமுடியும்.

எனவே, நம் பரம போஷகரையே நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். இந்த வாழ்க்கையில் எது மெய் மதிப்புள்ளது என்பதை தாவீது உணர்ந்திருந்தார்; 'சிங்கக்குட்டிகள்தாழ்ச்சியடைந்துபட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது' என்கிறார். சங் 34:10. பொன், வெள்ளியைக் காட்டிலும் ஞானமும் அறிவும் மேலானவை என்று சாலொமோன் உணர்ந்திருந்தார். நீதி 3:13,14. நாம் பெற்றிருக்கும் பொருட்களிலிருந்து கண்களை விலக்கி, நம்மைச் சொந்தமாக்கியிருக்கும் ஜீவனுள்ள கிறிஸ்துவைநோக்கிப் பார்க்கும்போதுதான் மெய்யான சந்தோஷத்தையும் நீதியான வாழ்க்கையையும் பெற முடியும்.

இவ்வுலகின் வசீகரங்களிலிருந்து தப்புவதற்கான ஒரேவழி, இயேசுவுடன்உயிருள்ளதும்பிரிக்கமுடியாதது மான் உறவை வைத்திருப்பதாகும். அந்த உறவின் கூறுகளை ஆராய்வோம்; ஆவிக்குரிய வாழ்வில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் இவ்வுலகில் திரைக்குப் பின்னால் இருக்கும் வல்லமைபற்றி அறிந்திருக்கவேண்டும்; கிறிஸ்து நம் வாழ்க்கைக்கு மெய்யான அர்த்தத்தைத் தரவேண்டியதின் முக்கியத்துவம்பற்றியும் பார்ப்போம்.

2017, ஜனவரி 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

உலகப்பொருட்கள் அதிகம் இல்லாதவர்களும்கூட உலக ஆசாபாசங்களில் பற்றுமிக்கவர்களாக இருக்கலாம்; அவர்களை கிறிஸ்துவிடம் சேர்த்துக் கட்டாமல், உலகத்தோடு பிணைக்கும் பலத்த சங்கிலியாக இந்தத் தன்மை இருக்கிறது. உலக ஐசுவரியங்களில் குறைவுள்ளவர்களாக இருந்து, உலகப்பொருட்களைச் சேர்க்க வேண்டுமென்கிற வெறி வந்துவிட்டால், அது கொடிய சாபத்தைக் கொண்டு வரும். நாம் ஆண்டவரின் கட்டுப்பாட்டிற்குள் இராவிட்டால், இரட்சிப்பைவிட்டு தூரமாக நம் ஆத்துமாவை அந்த வெறி வழிநடத்திவிடும். சாத்தானுக்கு இது தெரியும்; அதனால்தான், தன்னால் முடிந்தமட்டும் உலகப்பொருட்கள்மேல் நமக்கு நாட்டத்தை உண்டாக்கி, நம்மைச் சிறைப்படுத்தப் பார்க்கிறான். இந்தச் சூழ்நிலையில் நமக்குள்ள ஒரே பாதுகாப்பு என்ன?

***பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் என்று பவுல் சொல்கிறார். கொலோ 3:2. இதை எவ்வாறு செய்யலாம்? சங் 119:11; எபே 6:18.***

---

***எதிவற்றின்மேல் நாம் சிந்தை வைக்கவேண்டும்? பிலி 4:8. வேறு சில வசனங்கள் யாவை?***

---

வாழ்க்கையின் மேடு பள்ளங்களில், தொடர்ந்து கிறிஸ்துவிடம் நம்மை நாம் அர்ப்பணித்திருக்க வேண்டும்; அப்போதுதான் உலக ஆசை எந்த உருவில் வந்தாலும் அதற்குத் தப்பமுடியும். சங் 34:1. மோசே இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். எபி 11:26. நமக்கு கிறிஸ்துவோடு இருக்கிற உறவே எல்லா உறவுகளிலும் முதன்மையானதாக இருக்கவேண்டும். பிரதிபலனை எதிர்பார்த்து அல்ல, அவர் மேலுள்ள அசையாத நம்பிக்கையால் நாம் அன்பு கூரவேண்டும்; அதைத்தான் அவர் விரும்புகிறார். ‘‘கிறிஸ்து யார்? நமக்காக என்ன செய்திருக்கிறார்?’’ என்பவற்றை உணர்ந்து, அவரிடம் நம்மை அர்ப்பணிக்கவேண்டும்; அவரிடம் விசுவாசமாகவும் அர்ப்பணிப்பாகவும் இருந்தால், உடனடியாக என்ன நன்மைகள் கிடைக்கும் என்று தேடக்கூடாது.

கிறிஸ்துவுக்குட்பட்டவர்களாக வாழவேண்டும். அவருடைய திட்டங்கள் நம்முடைய திட்டங்களாக வேண்டும். கலப்பையின்மேல் கைவைத்தபிறகு, ‘பின்னிட்டுப்’ பார்க்காமல் இருப்பதுதான் மெய்யான அர்ப்பணிப்பு. லூக் 9:62. அப்படி இருந்தால், நம் முழு ஆற்றலும் வெளிப்படும்படி, இயேசு நம்மை மேன்மைப்படுத்துவார். பொருட்கள் நம் வாழ்வின் மையமாகாமல், கிறிஸ்து நம் வாழ்வின் மையமாகவேண்டும்; அதுமட்டுமே நம் வாழ்வின் வெற்றிடத்தை நிரப்பும்.

---

ஏதாவது ஒரு பொருளையோ, உலகப்பிரகாரமான விஷயத்தையோ அதிகம் விரும்பி, பின்னர் அதைப் பெற்றுக்கொண்ட சம்பவத்தை நினைவுகூருங்கள். அது கிடைத்த திருப்தியும் சந்தோஷமும் எத்தனை நாட்கள் நீடித்தன? அதைப் பெறுவதற்குமுன் காணப்பட்ட அதே தவிப்பு நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டீர்களா?

600 கோடிக்கும் அதிகமான வேதாகமங்களை உலகம்முழுவதிலும் விநியோகித்திருக்கிறார்கள். பெற்றவர்களில் எத்தனை பேர் இந்த வேதாகமம் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையென்று நினைத்திருப்பார்கள்? சத்தியத்தை அறிகிற வாஞ்சையோடு எத்தனை பேர் அதை வாசித்திருப்பார்கள்?

சரியான விதத்தில் வேதாகமத்தை வாசித்தால், வேதாகமம் நமக்கு ஆன்மிக வழிகாட்டியாகத் திகழும்; பொய்யும் குழப்பமும் நிறைந்த உலகில் நாம் பத்திரமாகச் செல்ல உதவும். தேவன் தந்திருக்கும் ஜீவனுள்ள ஆவணம் வேதாகமம். எபி 4:12. அதில் சொல்லப்படும் சத்தியங்களை வேறு எங்கும் நாம் பெறமுடியாது. அனுதின வாழ்க்கைப் பாதைக்கான வரைபடமே வேதாகமம். அது நம் அறிவுத் திறனை விருத்தியாக்குகிறது; நம் குணங்களைச் சுத்திகரிக்கிறது.

***வேதாகமம், குறிப்பாக நற்செய்திப் புத்தகங்கள் இயேசுவைப்பற்றி அதிகாரப்பூர்வமான தகவல்களைத் தருகின்றன. யோவான் 5:39; 14:6; 20:31 ஆகிய வசனங்கள் இயேசுவைப்பற்றி என்ன சொல்கின்றன? அவர் எவ்வாறு நமக்கும் நம் நம்பிக்கை அனைத்திற்கும் மிகவும் முக்கியமானவராக இருக்கிறார்?***

சத்தியத்தின் நம்பத்தகுந்த ஆதாரம் வேதாகமம். இயேசுவே சத்தியம்; வேதாகமத்தில் இயேசுவைக் காணலாம்; ஏனென்றால், அங்கேதான் அவரைப் பற்றிய வெளிப்பாடு இருக்கிறது. இயேசு யார் என்பதையும், அவர் நமக்காக என்ன நிறைவேற்றியிருக்கிறார் என்பதையும் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் நாம் அறிந்துகொள்ளலாம். அறியும்போது, அவர்மேல் அன்பு பிறக்கும்; அவருடைய நித்திய பாதுகாப்பின் கரங்களில் நம்முடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுப்போம். இயேசுவைப் பின்பற்றி, வேதாகமத்தில் அவர் சொல்லியுள்ளவற்றிற்குக் கீழ்ப்படிந்தால் பாவக் கட்டுகளிலிருந்தும், உலகத்தின் அடிமைத்தனங்களிலிருந்தும் நாம் விடுதலை ஆவோம். ‘குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.’ யோவான் 8:36.

***ரோமர் 8:5,6 எதைக் குறித்து எச்சரிக்கிறது? மாம்ச சிந்தையோடுள்ள போராட்டத்தை மேற்கொள்வதற்கு வேத ஆராய்ச்சி எவ்வாறு உதவக்கூடும்?***

---

கவனம் தேவை; உலகத்தின் மேலும் உலகப்பொருட்களின் மேலும் நம் நாட்டம் இருந்தால், அந்த நாட்டம் தேவனிடமிருந்து நம்மை விலக்கிவிடும். இங்கேதான் வேதாகமம் பயன்மிக்கதாகிறது; கிறிஸ்தவ வாழ்க்கையின் மையமான ஆவிக்குரிய நித்தியநிஜங்கள் அதில் உள்ளன.

உலகப்பொருட்கள் மேலான நாட்டமானது ஆவிக்குரிய ஒழுக்கத்தை நாடுவதற்கு நம் சிந்தையைப் பக்குவப்படுத்தாது. மாறாக, வேதாகம நியதிகளுக்குப் பதிலாக பேராசையையும் சுயநலத்தையும் இச்சையையும் கிளப்பிவிடும். வேதாகமம் வலியுறுத்துகிற அன்பு நம்மில் காணப்பட்டால், பிறருக்கு நம்மையே கொடுப்பதின் முக்கியத்துவத்தை அது போதித்து, நம் உறவுகளை வளர்க்கும். மாறாக, உலக ஆசையானது அனைத்தையும் நமக்காகச் சேர்க்கச் சொல்லும்; அது இயேசு சுட்டிக்காட்டுகிற நன்மை ஒவ்வொன்றுக்கும் புறம்பானதாக இருக்கும்.

'ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.' யோவான் 17:3. அதனால்தான் கிறிஸ் தவர்களின் விசுவாசத்திற்கு அவரோடுள்ள உறவு அடிப்படையாக இருக்கிறது. தேவனை அறிவது 'நித்திய ஜீவன்;' அதாவது அவரோடு உறவுவைப்பதே அந்த ஜீவனை நமக்குப் பெற்றுத்தரும். தேவன் தம் வார்த்தையின்மூலம் நம்மோடு பேசுகிறார். நாம் நம் பங்குக்கு ஜெபத்தின்மூலம் அவரோடு பேசுகிறோம்.

நாம் நம்முடைய இருதயங்களையும் சிந்தையையும் இந்த உலகக் காரியங் களின்மேல் வைக்காமல், பரலோக விஷயங்களில் வைப்பதற்கு ஜெபம் இன்றி யமையாததாகும். இந்த உலகத்தைக்காட்டிலும் மேலான ஒன்று இருப்பதை ஜெபம் நம் சிந்தையில் பதியச்செய்கிறது.

கவனம் தேவை! சிலசமயங்களில் நம் சுயநல தன்மையைமட்டுமே வெளிப் படுத்துகிற ஒன்றாக ஜெபம் மாறிவிட வாய்ப்பிருக்கிறது. அதனால்தான் தேவ னுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து நாம் ஜெபிக்கவேண்டும்.

சில வருடங்களுக்குமுன் ஒரு பெண், "ஆண்டவரே, எனக்கு ஒரு மெர்சி டிஸ் பென்ஸ் கார் வாங்கித்தரமாட்டீரா?" என்று பாடினார். தேவனை விவாசிப் பதாகச் சொல்கிறவர்கள் பொருளாசையுள்ளவர்களாக இருப்பதை தன்னுடைய பாணியில் நக்கல்செய்தார். ஜெபம் என்பது தேவனுக்கு நம்மை அர்ப்பணிக்கிற ஒரு செயலாகும்; உலகத்திற்கு மரித்த நிலையாகும். எனவே, நம் சித்தத்தை நாடு கிறவர்களாக அல்லாமல், தேவனுடைய சித்தத்தை நாடி ஜெபிக்கவேண்டும்.

***ஜெபத்தில் முக்கிய அங்கமாகக் காணப்படவேண்டிய விஷயம் என்ன? எபி 11:1-6. தேவனி டத்தில் விசுவாசத்தோடு சேருவது என்றால் என்ன? விசுவாசத்தோடு ஜெபிப்பது என்றால் என்ன?***

---

விசுவாசமில்லாமல் ஜெபித்தால், நம் முன்அபிப்பிராயமும், சாத்தானுடைய போலி விசுவாசமும் அதில் கலந்திருக்கும். "ஜெபமும் விசுவாசமும் பின்னிப் பிணைந்தவை; அவற்றைக் கருத்தோடு ஆராயவேண்டும். விசுவாச ஜெபம் ஒரு தெய்வீக அறிவியல்; வெற்றிகரமான வாழ்க்கை வாழ விரும்புகிற அனைவரும் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். 'நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவை களைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்' என்று கிறிஸ்து சொல்கிறார். மாற்கு 11:24. தேவனுடைய சித்தப்படி நாம் கேட்க வேண் டும் என்கிறார்; அவர் வாக்குரைத்திருப்பவற்றை நாம் கேட்கவேண்டும்; நாம் பெற்றுக்கொள்கிற ஒவ்வொன்றையும் அவருடைய சித்தத்தைச் செய்ய பயன் படுத்தவேண்டும். இப்படிச் செய்தால் வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும்.' - *EGW, Prayer, p 57.*

---

உங்கள் ஜெபவாழ்க்கைபற்றிச் சிந்தித்துப்பாருங்கள். எதற்காக ஜெபிக்கிறீர்கள்? எவற் றையெல்லாம் வலியுறுத்தி ஜெபத்தில் கேட்கிறீர்கள்? வேறு என்னென்ன விஷயங்களுக் காக இனி ஜெபிக்கலாம் என்று புரிந்துகொண்டீர்கள்?

தேவனிடம் சாலொமோன், 'உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும்?' என்று எல்லாவற்றையும்விட முக்கியமானதாக ஞானத்தைக் கேட்கிறார். 1இராஜா 3:9. வேதாகமத்திலேயே மிகவும் அருமையான சம்பவங்களில் இதுவும் ஒன்று.

***சாலொமோனுக்கு சில முக்கிய அறிவுரைகளை தேவன் வழங்கினார்; அவற்றிற்குச் செவிகொடுத்திருந்தால், அவர் பெற்றிருந்த செல்வத்தால் உண்டான அழிவைத் தவிர்த்திருக்கலாம். தேவன் அவருக்குக் கொடுத்த அறிவுரைகள் ஏன் நம் ஒவ்வொருவருக்கும் முக்கியமானவைகளாக இருக்கின்றன? 1இராஜா 3:14; 1யோவான் 5:3; 1பேதுரு 4:17.***

---

சாலொமோன் மிகுந்த ஞானத்தைப் பெற்றிருந்தார். பெற்ற ஞானத்தைப் பயன்படுத்தி, வாழவேண்டும். இல்லையேல் அது வெறும் தகவல் அறிவாக தங்கிவிடும். அப்படி வாழாத ஞானமானது உண்மையில் ஞானமே அல்ல என்று வேதாகமம் கூறுகிறது. தேவனையும் அவருடைய நிபந்தனைகளையும்பற்றிய சரியான தகவல்களை அறிந்திருக்கும் பலர் இரட்சிப்பை இழந்துபோவார்கள். சாலொமோனுடைய கீழ்ப்படியாமையானது தேவன் அவருக்குக் காட்டின பாதையில் செல்லவிடாமல் அவரைத் தடுத்தது. தன் வாழ்க்கையின் பின் நாட்களில்தான் அவர் சுயநினைவுக்கே வருகிறார். 'முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகள் எல்லாம் அதற்கு நிகரல்ல' என்கிறார். நீதி 8:11.

அறிவையும் புத்தியையும் செயல்படுத்துவதுதான் ஞானம். அறிவு என்பது தகவல்களை அறிந்திருப்பது; புத்தி என்பது எது நல்லது, எது கெட்டது என பகுத்தறிவது; ஞானம் என்பது நாம் பெற்றிருக்கும் அறிவின்படியும் புத்தியின்படியும் வாழ்வது. ஞானமுள்ள உக்கிராணக்காரர்களாக இருப்பதற்கு அறிவும் புத்தியும் மாத்திரம் போதா; அந்த அறிவின்படியும் புத்தியின்படியும் வாழ்வதால் கிடைக்கிற அனுபவமும் அவசியம்.

ஞானத்திலும் புத்தியிலும் தேர்ந்திருப்பவர்கள்கூட பொருளாசை எனும் மாயையான வாழ்க்கையில் மூழ்கிப்போய்விடலாம்; தான் பெற்ற அறிவின்படி அவர் வாழாமல் இருப்பதே அதற்குக் காரணமாக இருக்கும். சாலொமோனின் வாழ்க்கைதான் அதற்குச் சிறந்த உதாரணம்.

1கொரி 3:19ஐ நீதி 24:13,14 உடன் ஒப்பிடுங்கள். இந்த வசனங்கள் சொல்லும் இரண்டு வகை ஞானத்திற்கு இடையேயுள்ள வித்தியாசம் என்ன? உங்கள் பதிலை ஓய்வுநாள் வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.

---

மாபெரும் போராட்டம் நிஜமாக நடைபெற்றுவருகிறது; நம் ஆத்துமாக்கள் யாருக்கென்று இரண்டு அணிகள் சண்டையிட்டு வருகின்றன. ஒரு சாரார் நம்மை கிறிஸ்துவிடமும் மற்றவர்கள் நம்மை உலகத்திடமும் இழுக்கிறார்கள். யோவான் 6:44; 1யோவான் 2:16. பரிசுத்த ஆவியானவர் நம்மை சரியான வழியில் நடத்திச் செல்ல வல்லவர்; அதற்கு நம்மை நாம் அவரிடம் அர்ப்பணித்தே ஆகவேண்டும்.

'சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.' யோவான் 16:13; யோவான் 14:16. இன்று மக்கள் சபலங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்வதைக் காண்கிறோம்; ஆனால் கொள்கைக்கும் விசுவாசத்திற்கும் உண்மையுள்ளவர்களாக வாழ்வதற்கு, பரிசுத்த ஆவியானவர் நமக்கு வல்லமை தருகிறார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி இவ்வுலகத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக வாழ்வதுதான் பரலோகத்தில் வாழ்வதற்கு நம்மைத் தகுதிப்படுத்துகிறது.

'உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கவேண்டும்' என்று பவுல் ஆலோசனை கூறுகிறார். 1கொரி 2:4. உலகம் பெரும்பாலும் பொருளாசையைக் காட்டி, நம்மை வசப்படுத்துகிறது:அதன்மூலம் தேவனிடமிருந்து விலக்குகிறது. மாறாக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு நாம் எதிர்த்து நிற்காவிட்டால், அவர் நம்மை இயேசுவிடம் அழைத்துச்செல்வார்.

***உலகத்தோடும் அதன் கவர்ச்சிகளோடும் நாம் போராடி வருகிறோம்; இந்தப் போராட்டத்தில், நமக்கு வெளியேயிருந்து உதவிகிடைத்தால்தான் நாம் வெற்றிபெறமுடியும். எசே 36:26,27; யோவான் 14:26; எபே 3:16,17. ஆவியானவர் நம்மை முற்றிலும் ஆட்கொள்ள நாம் அனுமதித்தால், ஆவிக்குரிய வாழ்வில் நாம் வெற்றிபெறுவதற்கு தேவன் என்னவெல்லாம் செய்வார்?***

'பொய்யான கொள்கைகள், பாரம்பரியங்கள்மூலம் மனதை சாத்தான் ஆக்கிரமிக்கப் பார்க்கிறான். தவறான தரநிலைகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்து, மக்களுடைய குணத்தைச் சீர்கெடுக்கிறான். வேதவாக்கியங்கள்மூலம் பரிசுத்த ஆவியானவர் நம் மனதில் பேசி, இருதயத்தில் சத்தியத்தைப் பதியச்செய்கிறார். அவ்வாறு பொய்யை அடையாளங்காணச் செய்து, அதை ஆத்துமாவிலிருந்து வெளியேற்றுகிறார். தேவ வார்த்தையின்மூலம் கிரியைசெய்கிற சத்தியஆவியானவராலே, கிறிஸ்து தாம் தெரிந்துகொண்டவர்களை தமக்குக் கீழ்ப்பட்டிருக்கச் செய்கிறார்.' – *EGW, DA, p 671.*

பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் செய்தியாளராக இருக்கிறார்; கிறிஸ்து பரலோகம் சென்றபிறகு, பூமியிலிருக்கும் தேவனாக பரிசுத்த ஆவியானவரைத் தந்துவிட்டுச் சென்றார்; நமக்குக் கிடைத்திருக்கும் மேலான பரிசு அவர். உலகத்தின் 'கவர்ச்சிகள்' எனும் கொடிய வசீகரத்திலிருந்து தப்புவதற்கான வல்லமையை நமக்குத் தர பரிசுத்த ஆவியானவர் முயன்றுவருகிறார்.

உலகம் நம்மை இழுக்கிற இழுப்பு பயங்கரமானது! உலகத்தின் பாவத்தூண்டல்களை மேற்கொள்ள பரிசுத்த ஆவியானவர்மட்டுமே வல்லமை தரமுடியும்; அவரிடம் உங்களை ஒப்படைக்க, நீங்கள் இப்போதே என்ன தீர்மானங்களைச் செய்யப்போகிறீர்கள்?

## மேலும் படிக்க:



உக்கிராணக்காரர்களிடம் கடமையும் அன்பும் காணப்படும். ‘கடமையும் அன்பும் இரட்டைப் பிள்ளைகள் என்பதை மறக்கவேண்டாம்; இரண்டும் சேர்ந்தால் எதையும் சாதிக்கலாம்; பிரிந்திருந்தால் இரண்டாலும் பயனில்லை.’ – *EGW, 4T, p 62.* கடமை என்பது செயல்படுகிற அன்பு. அன்பு நம்மைக் கடமைசெய்யத் தூண்ட வேண்டுமா? கிறிஸ்து செய்த தியாகத்தைத் தியானியுங்கள்; அது போதும்.

இதற்கு எதிர்மாறானது உலக நியதியான வெறுப்பும் அதன் உடன்பிறப்பான கலகமும். வெறுப்புச் செயலாக வெளிப்படுவதே கலகம். தேவனுக்கு எதிராக லூசிபர் கலகம்செய்தான். எசே 28:16,17. இனி அவன் அழிக்கப்படுமட்டும் அவன் ஓயமாட்டான். அன்பின் அதிகாரத்தை, அதிகாரத்தின்மேலான அன்பாக மாற்றி விட்டான். இயேசுவின் அதிகாரத்தையும் வல்லமையையும் இஸ்ரவேலின் மதத் தலைவர்கள் வெறுத்தார்கள். மத் 22:29. அவர்கள் தேவாலயத்திலிருந்தும், அவரது கூர்மையான பார்வையிலிருந்தும் தப்பியோடியபோதும், அவர்கள் தங்கள் வழி களை மாற்றவில்லை.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *அன்பும் கடமையும் உடன்பிறப்புகள் என்று எலன் ஒய்ட் கூறுகிறார்; ஒன்றில்லாமல் மற்றதால் பயனில்லையாம். கடமைமறந்த அன்பு எப்படிப் பட்டதாக இருக்கும்? அன்பற்ற கடமை எப்படிப்பட்டதாக இருக்கும்? ஏன் இரண்டும் சேர்ந்தே காணப்படவேண்டும்?*

2. *கோபாக்கினை நாளில் ஐசுவரியம் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும். தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்; நீதிமான்களோ துளிரைப்போலே தழைப்பார்கள் என்று இந்த வார மனன வசனம் கூறு கிறது. நீதி 11:4,28. இதன் அர்த்தம் என்ன? ஐசுவரியத்தால் என்ன செய்ய முடியும்? என்ன செய்யமுடியாது? இவ்வசனம் சொல்வது என்ன?*

3. *சாலொமோன்பற்றி வகுப்பில் தியானியுங்கள். அவர் எவ்வாறு அவ்வளவு தூரம் வழிவிலகிச் சென்றுவிட்டார்? உலக ஆஸ்திகள் பயனற்ற மாயை என்று பிரசங்கி புத்தகம்முழுவதும் சொல்கிறது; அவற்றை ஏராளமாகப் பெற்றிருந்த சாலொமோன்தானே அப்படிச் சொல்கிறார். ஜெபிப்பதும், வேதம் வாசிப்பதும், கிறிஸ்துவோடு உறவுவைப்பதும் எவ்வாறு நாம் சரியான ஆவிக்குரிய பாதையில் செல்வதற்கு உதவியாக இருக்கும்?*

4. *உலக ஆஸ்திகள் அதிகம் பெற்றிராதவர்கள்கூட சாத்தான் விரிக்கிற வலை யில் எளிதில் சிக்கிவிடுகிறார்கள்; அது எப்படி?*

5. *இரண்டு வகையான ஞானம்பற்றி புதன்கிழமைப் பாடத்தின் கடைசியில் ஒரு கேள்வி கேட்டிருந்தோம்; அதற்கு உங்களுடைய பதில் என்ன? உங் கள் பதில்களை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*